2013 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் சேர்க்கை அங்கு அதிகமாகும்போது, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, உறுதியாக அதற்கான பயிற்சி நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 311, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

311—

மேம்பாலம்

***24844—திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி தொகுதி, காணை ஒன்றியம், மல்லிகைப்பட்டு கிராமத்தில் பம்பை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) விக்கிரவாண்டி தொகுதி, காணை ஒன்றியம், மல்லிகைப்பட்டு கிராமத்தில் பம்பை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.*

திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட காணை ஒன்றியத்திலே, மல்லிகைப்பட்டு கிராமத்திலே செல்கின்ற பம்பை ஆற்றின் குறுக்கே கீழே செல்லும் தரைப்பாலம் ஒன்று இன்றைக்கும் உள்ளது என்பது அப்பட்டமான உண்மை. அந்தத் தரைப்பாலத்தைத்தான் மல்லிகைப்பட்டு கிராமத்தைச் சுற்றியிருக்கிற பல கிராமத்து மக்கள் போக்குவரத்துக்காகப் பயன்படுத்துகிறார்கள்; மாணவர்கள் கல்விக்கூடங்களுக்குச் செல்வதற்காக அந்தப் பாலத்தைத்தான் பயன்படுத்துகிறார்கள்; விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை விழுப்புரத்திலே உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் அதைத்தான் பயன்படுத்துகிறார்கள். வறட்சியான காலத்திலே இந்தத் தரைப்பாலத்தைப் பயன்படுத்துவதிலே பிரச்சினை இல்லை என்றாலும்கூட, மழைக்காலங்களிலே வெள்ளப் பெருக்கால் போக்குவரத்து முற்றாக பாதிக்கிற ஒரு சோக நிகழ்வு ஆண்டாண்டு காலமாக ஏற்பட்டு, அந்த நிலை இன்றுவரை தொடர்கிறது. எனவே, அதைத் தவிர்க்க, மேம்பாலம் ஒன்றை விரைவிலே கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் கேட்டறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதி, காணை ஒன்றியம், மல்லிகைப்பட்டு கிராமத்தில் பம்பை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்கக் கோரும் இடமானது, மாவட்ட இதர சாலையான விழுப்புரம்–மாம்பலப்பட்டு–திருக்கோவிலூர் சாலையிலிருந்து மல்லிகைப்பட்டு–கோழிப்பட்டு வழியாக விழுப்புரம்–திருவண்ணாமலை சாலையில் இணையும் சாலையின் கி.மீ. 2/2–ல் உள்ளது. இந்த இடத்தில் பம்பை ஆறு குறுக்கிடுகிறது. இவ்விடத்தில் தற்போது குழாய் தாம்போகி உள்ளது. 2013–2014 ஆம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில், ரூபாய் 100 இலட்சம் செலவில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத்*

2013 ஏப்ரல் 25]

தெரிவித்துக்கொள்கிறேன். 2013–2014 ஆம் நிதியாண்டில், அப்பகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பம்பை ஆற்றின் குறுக்கே பாலம் விரைந்து கட்டப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.*

திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 312, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

312—

நியாய விலைக் கடை

***7679—திரு. சு. ரவி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, வடமாம்பாக்கம் ஊராட்சி, பாப்பாங்குளம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், வடமாம்பாக்கம் ஊராட்சி, பாப்பாங்குளம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.